**செ.வெ.எண் -11** **நாள்:04.10.2019**

## அரியலூர் மாவட்டத்தில் உள்ளாட்சி தேர்தலுக்கான வரைவு வாக்காள் பட்டியலை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.டி.ஜி.வினய், இஆப., அவர்கள் வெளியிட்டார்கள்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் உள்ளாட்சி தேர்தல் 2019-க்கான வரைவு வாக்காளர் பட்டியலை மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இஆப.,** அவர்கள் இன்று (04.10.2019) வெளியிட்டார்கள்.

மாவட்ட ஆட்சியர் அவர்கள் இப்பட்டியலை வெளியிட அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பெற்றுக்கொண்டார்கள்.

**பின்னர், மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-**

அரியலூர் மாவட்டத்தில் நடைபெறவுள்ள உள்ளாட்சி தேர்தல் 2019-க்கான 6 ஊராட்சி ஒன்றியங்கள், 2 நகராட்சிகள், 2 பேரூராட்சிகளுக்கான வாக்காளர்கள் பட்டியல்கள் முறையே அரியலூர் ஒன்றியத்தில் 43026 ஆண் வாக்காளர்கள், 42010 பெண் வாக்காளர்கள், மூன்றாம் பாலினத்தவர் 3 வாக்காளர்கள், திருமானூர் ஒன்றியத்தில் 47134 ஆண் வாக்காளர்கள், 47036 பெண் வாக்காளர்கள், ஜெயங்கொண்டம் ஒன்றியத்தில் 46201 ஆண் வாக்காளர்கள், 46489 பெண் வாக்காளர்கள், ஆண்டிமடம் ஒன்றியத்தில் 44589 ஆண் வாக்காளர்கள், 45347 பெண் வாக்காளர்கள், தா.பழூர் ஒன்றியத்தில் 42035 ஆண் வாக்காளர்கள், 41484 பெண் வாக்காளர்கள், மூன்றாம் பாலினத்தவர் 3 வாக்காளர்கள், செந்துறை ஒன்றியத்தில் 45378 ஆண் வாக்காளர்கள், 46210 பெண் வாக்காளர்கள், அரியலூர் நகராட்சியில் 11474 ஆண் வாக்காளர்கள், 12327 பெண் வாக்காளர்கள், ஜெயங்கொண்டம் நகராட்சியில் 12992 ஆண் வாக்காளர்கள், 13821 பெண் வாக்காளர்கள், உடையார்பாளையம் பேரூராட்சியில் 4773 ஆண் வாக்காளர்கள், 4771 பெண் வாக்காளர்கள், வரதராஜன்பேட்டை பேரூராட்சியில் 3418 ஆண் வாக்காளர்கள், 3627 பெண் வாக்காளர்கள் உள்ளனர்.

அதன்படி அரியலூர் மாவட்டத்தில் 301020 ஆண் வாக்காளர்கள், 303122 பெண் வாக்காளர்கள், மூன்றாம் பாலினத்தவர் 6 வாக்காளர்கள் ஆக மொத்தம் 604148 வாக்காளர்கள் அடங்கிய புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் இன்று (04.10.2019) வெளியிடப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் கே.ரகு (தேர்தல்), பாலகுரு (வளர்ச்சி), உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) பழனிசாமி, நகராட்சி ஆணையர் திருநாவுகரசு மற்றும் அங்கீகரிக்கப்பட்டஅரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**